13.08.2019
டி.வி.ஏ.138/19
ம.சா.1 ரெஜிதாமேனன்
<u>குறுக்குவிசாரணை.</u>

நான் பொருளியல் கணிணி படிப்பும், எம்பிஏ முதுநிலை படிப்பும் படித்துள்ளேன். எதிர்மனுதாரர் பிஏ ஆங்கிலம் மற்றும் எம்பிஏ பட்டப்படிப்பு மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள எம்.ஐ.டி. கல்லூரில் முடித்துள்ளார் என்றால் சரிதான். எனது திருமண சமயத்திலும் தற்போதும் நான் வாடகை வீட்டில் தான் வசித்து வந்தேன். எனது திருமணம் முடிந்த மறுநாள் கேரளா மாநிலத்தில் செர்பலாச்சேரி என்ற ஊரில் காயத்திரி மகால் என்ற ஒட்டலில் எதிர்மனுதாரர் சார்பில் திருமண வரவேற்பு நடைபெற்றது என்றால் அங்கு வைத்து சுமார் 25 உறவினர்களை அழைத்து மதிய உணவு கொடுக்கப்பட்டது. திருமணத்திற்கும் மேற்படி காயத்திரி மகாலில் நடந்த நிகழ்ச்சிக்கும் வெவ்வேறு பட்டுப் புடவைகளை அணிந்திருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் அனைத்தும் காயத்திரி மகால் நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் என்றால் சரிதான். அந்த புகைப்படங்கள் எ.ம.சா.ஆ.1. திருமணம் முடிந்து தேன் நிலவிற்காக மூணாறு என்ற இடத்தில் இரண்டு நாட்கள் ஒரு விடுதியில் தங்கியிருந்தோம். கொச்சினில் எதிர் மனுதாரருடன் நான் குடியிருந்த வீடு முதல் தளத்தில் அமைந்துள்ளது. அந்த வீடு சுமார் 48 வீடுகள் கொண்ட ஒரு அடுக்குமாடி குடியிருப்பாகும். என்கணவர் வீட்டில் கார் இருந்தது. வீட்டு வேலைக்கு லில்லிதாமஸ் மற்றும் மணி என்ற இரண்டு பெண்கள் இருந்தார்கள். நான் தங்கியிருந்த வீடு 3 படுக்கையறைகள் கொண்ட வீடாகும். அந்த வீட்டில் தான் 76 வயதுடைய எனது மாமனாரும் தங்கியிருந்தார். நான் என் கணவருடன் கடற்கரைக்கு சென்றதில்லையா என்றால் மாராறிக்குளம் கடற்கரைக்கு சென்றுள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் மேற்படி கடற்கரையில் எடுக்கப்பட்டது தான். 4 வதாக புகைப்படம் கொச்சினில் உள்ள ஆர்ஸ்டர்மெட்சிட்டி என்ற மருத்துவமனையில் எடுக்கப்பட்டதாகும். அந்தப் புகைப் படங்கள் எண்ணிக்கை 6. எ.ம.சா.ஆ.2. மேற்படி எ.ம.சாஆ.2 ல் உள்ள 6 வது புகைப்படம் என்னுடைய பிறந்த நாள் அன்று கொச்சினில் உள்ள மின்ஸ்வாக் என்ற சீன உணவு விடுதியில் எடுக்கப்பட்ட புகைப்படமாகும். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப் படங்கள் எண்ணிக்கை இரண்டும் எனது கணவருடன் சசிமேலர் என்ற ஐபிஎஸ் அதிகாரி இல்லத்தின் திருமண நிகழ்ச்சியின் போதுஎடுக்கப்பட்ட புகைப்படமாகும். அது எ.ம.சா.ஆ.3. எனது கணவரின் வியாபார நடவடிக்கைகளில் காசோலைகளில் யார் கைொயப்பம் செய்வார்கள் என்றும், வருடாந்திர தணிக்கையில் யார் கையொப்பம் செய்வார்கள் என்று எனக்கு தெரியாது. நான் கர்ப்பமான பின்பு முதலில் வீட்டிற்கு அருகில் உள்ள விஜயா கிளினிக் என்ற மருத்துவ மணையிலும் அதன் பின்பு எனக்கு இரத்தப்போக்கு ஏற்பட்டதால் ஏஸ்டர்மெர்சிட்டி என்ற மருத்துவ மனைக்கு சென்றேன். மேற்படி மருத்துவமனை கொச்சினில் உள்ள பிரபலமான மருத்துவமனை என்றால் சரிதான். நான் கொச்சினில் இருந்து கோவை வந்தபின்பு தான் பி.எஸ்.ஜி. மருத்துவமனையில் எனக்கு அபார்ஷன் ஏற்பட்டது என்றால் அபார்ஷன் ஏற்படவில்லை. மிஸ்கேரேஜ் ஆனது. நான் கோவை வந்தபின்பு கொச்சினில் சிகிச்சை அளித்த மருத்துவர்களை நான் தொடர்பு கொள்ள வில்லை. எனது கணவரும் அவரது உறவினர்களும் தங்கள் சுயநலத்திற்காக கர்ப்பத்தை நீட்டித்து வைத்திருந்தார்கள் என்று கொச்சின் மருத்துவர்கள் கூறினார்கள் என்ற விபரத்தை இந்த வழக்கு புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் Public Relation Consultant ஆக இருந்தேன். நான் கொச்சினில் இருந்த சமயத்தில் ரெப்போஸ் படுக்கைகள், கே.டி.எம்.மோட்டார் சைக்கிள் மற்றும் பைசூஸ் போன்ற நிறுவனங்களின் செய்திகளை பத்திரிக்கைகளில் வெளியிட்டிருக்கிறேன். நான் என் கணவர் வீட்டில் இருந்த சமயத்தில் என்னிடம் கைபேசி மற்றும் மடிக்கணிணி இருந்தது.

(குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளுங்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)